மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# ‘விண்ணமுதம்’ மரபுகவிதைத் தொகுப்பில் காணப்படும் திருக்குறளின் இறை கருத்துகள்

## Similarity Thoughts of God Found from ‘Thirukural’ and ‘Vinnamutham’

மாலினி சேகர் / Malnni Segar[1]
[1]B.Ed, Sultan Idris Education University
Corresponding Email: malnnisegar1998@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

விண்ணமுதம் தமிழ்க்கவிதைத் தொகுப்பில் அடங்கியிருக்கும் கவிதைகள் யாவும் மொழி, குமுகாயம், இயற்கை, உறவுகள், இறை, காதல், வாழ்த்து, பல்சுவை போன்ற பொருண்மைகளை மையப்படுத்தி அமைந்துள்ளன. அவற்றுள் ‘இறை’ பொருண்மையில் அமைந்த கவிதைகள் மட்டுமே இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. திருக்குறளின் முதல் அதிகாரமான ‘கடவுள் வாழ்த்து’ இவ்வாய்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் இறைமையைப் பற்றியும், இறைவனின் ஆற்றலைப் பற்றியும், இறைவனை அடையும் வழிகளைப் பற்றியும் பத்துத் திருக்குறள்களின் வழி உலக மக்களுக்கு எடுத்துரைத்திருப்பார். அவ்வாறு இருக்கையில், கவிஞர் விண்ணமுதன் அவர்கள் வெளியிட்ட ‘விண்ணமுதம்’ எனும் மரபுகவிதைத் தொகுப்பில் உள்ள ‘இறை’ பொருண்மையின் கீழ் இடம்பெற்றுள்ள கவிதைகளில் காணப்படும் திருக்குறளின் ‘கடவுள் வாழ்த்து’ அதிகாரத்தின் கருத்துகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு நூலாய்வு அமைப்பில் வடிவமைக்கப்பட்டுப் பண்புசார் அணுகுமுறையை உள்ளடக்கி அமைந்துள்ளது. அதுமட்டுமின்றி, ஆய்வுக்குத் தொடர்பான திருக்குறள், தொல்காப்பியம், விண்ணமுதம், அவற்றோடு வேறு சில புத்தகங்களும், ஆய்வேடுகளும் ஆய்வுத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
**கருச்சொற்கள்:** விண்ணமுதம், திருக்குறள், இறை, கடவுள் வாழ்த்து

**Abstract**

All the poems contained in the 'Vinnamudham' Tamil poetry collection are centered on subjects such as language, society, nature, relationships, God, love, wishes, and etc. Of these, only poems based on the subject matter of 'God' have been subjected to this study. The first chapter of 'Thirukkural', 'The praise of God', has been selected for this study. In this chapter, Thiruvalluvar would have explained to the people of the world about sovereignty, the power of God and the ways to reach God through ten 'Thirukkurals'. In that case, the purpose of this study is to examine the concepts of Thirukkural's 'The praise of God' chapter found in the poems contained under the subject of 'God' in the traditional collection of poems 'Vinnamutham' published by the poet Vinnamuthan. This study has been designed in a bibliographical setting and involves a qualitative approach. In addition to this, 'Thirukkural', 'Tholkappiyam', 'Vinnamutham', along with some other books and treatises related to the study have been used as research data.
**Keywords:** Vinnamutham, Thirukkural, God, The praise of God

**முன்னுரை**

“மரபு என்ற சொல், பழைமை, முறைமை, இயல்பு, இலக்கணம், ஒழுங்கு, பரம்பரை பெருமை எனப் பல பொருளைக் குறிக்கும்”(ஆவலன், 2019). தொல்காப்பியத்தில், பொருளதிகாரத்தின் கீழ் செய்யுளியலில்,

“மரபே தானும்
நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று” (தொல்காப்பியம்,1337)

எனத் தொல்காப்பியர் மரபைச் சொல் மரபு எனவும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நாற்சொற்களின் தன்மையுடன் யாப்பு வழி அமைவது மரபு எனவும் விளக்குகிறார். யாப்பு என்றால்,

“எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.” (தொல்காப்பியம், 1335)

எழுத்து முதலாக, அசை, சீர், அடியெனத் தொடர்புற்றிருக்கும் அடியில் படைப்பாளி தான் கூற வந்த கருத்தை முற்று பெறச் செய்தல் யாப்பு என்று யாப்பினைக் கற்றறிந்தவர் கூறுவர். இன்னும் விரிவாகச் சொன்னால் யாப்பு எனப்படும் யாப்பிலக்கணமானது செய்யுள் எழுதுவதற்குரிய இலக்கண அமைப்பாகும். அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய யாப்பு இலக்கணத்தின் உறுப்புகளைக் கருத்தில் கொண்டு, சொல் மரபின்படி அமைக்கப்படும் செய்யுளைத் தான் மரபுகவிதை என்பர். எனவே, உலக மக்கள் யாவரும் அறிந்த வான்புகழ் கொண்ட வள்ளுவர் அருளிய திருக்குறள் வெண்பா வகையைச் சேர்ந்த மரபுகவிதை எனலாம். அவ்வகையில், சிறு வயதிலேயே மலேசிய மரபு கவிஞராகத் திகழும் விண்ணமுதன் அவர்கள் வெளியிட்ட ‘விண்ணமுதம்’ எனும் மரபுகவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ‘இறை’ பொருண்மையின் கவிதைகளில் உள்ள திருக்குறளின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் கருத்துகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**மலேசியக் கவிஞர் விண்ணமுதன் குறித்த ஓர் அறிமுகம்**

கவிஞர் விண்ணமுதன் அவர்களின் இயற்பெயர் சரண் சுக்லாம் ஆத்மலிங்கம். சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்தின் (UPSI) இறுதியாண்டு மாணவரான இவர், நான்காம் பருவத்தில் பொருளதிகார வகுப்பின் போது இணைப்பேராசிரியர் முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை அவர்களிடம் யாப்பிலக்கணம் பயின்ற போது இவருக்கு மரபுகவிதையின் மேல் அளவற்ற நாட்டம் ஏற்பட்டது. 2020ஆம் ஆண்டுத் தொடங்கி, இவர் ‘விண்ணமுதன்’ என்ற புனைபெயரில் பல மரபுகவிதைகளை இயற்றி வந்தார். இவரின் தொடர் முயற்சியின் விளைவாகப் பல போட்டிகளிலும் கவியரங்கங்களிலும் பங்கெடுத்துப் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ளார். இவரின் மாபெரும் சாதனையானது மலேசிய இலக்கிய வரலாற்றிலேயே 22 வயதிலேயே தான் இயற்றிய மரபுகவிதைத்தொகுப்பை நூல் வெளியீடு செய்தது தான்.

**விண்ணமுதம் (இறை) – திருக்குறள் (கடவுள் வாழ்த்து)**

பொய்யாமொழிப் புலவர் இயற்றிய திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என 3 தொகுப்புகளும், 133 அதிகாரங்களும் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 10 குறளென மொத்தம் 1330 திருக்குறள்களும் இடம்பெற்றுள்ளன என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இவ்வாய்வில் திருக்குறளின் முதல் அதிகாரமான 'கடவுள் வாழ்த்து'-இல் இடம்பெற்றிருக்கும் 10 திருக்குறள்கள் மட்டுமே உட்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, 'விண்ணமுதம்' கவிதைத் தொகுப்பில் பல கவிதைகள் இடம்பெற்றிருந்தாலும் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கவிதைகள் 'இறை' பொருண்மையின் கீழ் எழுதப்பட்ட 'அங்கயற்கண்ணி', 'இறையருளாளன்', 'கோன்', 'சிவனருள்', 'தேடி வந்து காத்திடு!', 'வெண்டாமரை வெண்ணிலவு', 'பூசமதில் பிறந்தவனே!', 'வள்ளல் பெருமான்' ஆகிய 8 கவிதைகளே ஆகும். 'இறை' என்றால் எங்கும் பரந்து நிறைந்து இருப்பது. அதனால் தான் எல்லா இடத்தில் நிறைந்திருக்கும் பரம்பொருளை இறைவன் என்கிறார்கள். இதனால் தான்,

> வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
> ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க் (திருவாசகம், 15)

என நாம் காணும் அனைத்துமே அந்தப் பரம்பொருளின் வடிவமே என்று நம் பக்தி இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளனர். 'கடவுள் வாழ்த்து' உலக மறையான தனிச்சிறப்புப் பெற்ற திருக்குறளின் முதல் அதிகாரமாகும். இம்முதலதிகாரத்தில், கடவுள் வாழ்த்தாகக் கூறினாலும், இதில் கடவுளைப் பற்றிய உண்மையும், கடவுளின் இலக்கணமும், வீடுபேறு அடைய விரும்புபவர்களுக்கான இலக்கணமும் அதனை அடைவதற்கான வழியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. (நல்லசாமி பிள்ளை, ஜே. எம், 1923).

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

| கவிதை | அடிகள் | திருக்குறள் |
| --- | --- | --- |
| அங்கயற் கண்ணி | "பெய்தாள் **அருளினைப்** பெண்ணவள் நம்முளே எய்தாள் **அறிவின் எழிலம்பை**!" | குறள் 9: (**பெருங்கருணை உடையவன்**) |
| | "சொக்கனின் பாதியே சோதியின் **ஆதியே"** | குறள் 1 |
| இறையருளாளன் | "**துன்பம் தனைநீக்கித்** தூய வடிவாகத் தோன்றிடுவாய்!" | குறள் 4 |
| | "**தடைகள் விலக்கித் தடுத்தாட்கொள்** எம்நற் றமிழ்க்குருவே!" | குறள் 5 |
| கோன் | "தீர்த்தாய் நான்செய்த **தீவினைச் செயல்**தரும் தீதை!" | குறள் 5 |
| | "வார்த்தாய் **இன்பமும்** வாழ்வினில் **என்றுமே** வளமாய்!" | குறள் 4 |
| சிவனருள் | "படைத்துநீ காத்தெனுள் **பாவமினி** அடங்கிடா நிலையினில் அழித்திடுவாய்!" | குறள் 5 |

| | | |
|---|---|---|
| | **"காயமும் கரைந்திடக் காத்திடுமே!** தூயதாய்த் தன்னுடல் தோன்றிடுமே!" | குறள் 10 |
| தேடி வந்து காத்திரு! | "ஏது **துன்பம்** ஏது **சோகம்** ஏதல் லல்என் வாழ்வினில்!" | குறள் 4 |
| | "ஆல கால ஆற்றல் போக்கும் ஆரு யிர்எம் **ஆதியே!"** | குறள் 1 |
| வெண்டாமரை வெண்ணிலவு! | "பவளவாய் சிரித்திருக்கப் பார்வாழ **கல்விதந்தாள்!"** | குறள் 9: **(பெருங்கருணை உடையவன்)** |
| | **"கவலையினை அறுக்கின்ற** கண்களைக் கொண்டிடுவாள்!" | குறள் 4 |
| பூசமதில் பிறந்தவனே! | **"பாசமதில்** சிறந்தவனே! வீசுகின்ற தென்றலிங்குப் **பேசிடுமே நின்புகழை!"** | குறள் 9: **(பேராற்றல் உடையவன்), (பெருங்கருணை உடையவன்)** |
| | "முருகனுன **தருள்பெறவே** விரும்பியென்றும் பாடிடுவேன்! சரவணனே **நின்கருணை** பரவிடவே செய்திடுவேன்!" | |
| வள்ளல் பெருமான் | "உள்ளொளி ஏற்றும் **உயர்வான நல்லன்பை** ஓம்புகின்ற வள்ளலே!" | குறள் 6 |
| | "நின்னொளி வார்த்தே எனையினி வாட்டுகின்ற கள்ளனாம் **மாயையைக்** காணா உலகினைக் காட்டிடுவாய்!" | குறள் 5 |

மேற்காணும் அட்டவணையில் 'விண்ணமுதம்' எனும் மரபுகவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'இறை' பொருண்மை கவிதைகளில் உள்ள திருக்குறளின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் கருத்துகளும் அக்கருத்துகளைக் கொண்ட திருக்குறளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| **திருக்குறள்** | **மு.வரதரசனார் அவர்களின் விளக்கம்** |
|---|---|
| குறள் 1:<br>அகர முதல எழுத்தெல்லாம்<br>ஆதி பகவன் முதற்றே உலகு | எழுத்துகள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது |
| குறள் 4:<br>வேண்டுதல்வேண் டாமை<br>இலானடி சேர்ந்தார்க்கு<br>யாண்டும் இடும்பை இல | விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை |
| குறள் 5:<br>இருள்சேர் இருவினையும்<br>சேரா இறைவன் | கடவுளின் உண்மை புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை |

| | |
|---|---|
| பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு | |
| குறள் 6:<br>பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார் | ஐம்பொறி வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த, இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர் |
| குறள் 9:<br>கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை | கேட்காதசெவி, பார்க்காத கண் போலவே எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம் |
| குறள் 10:<br>பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார் | இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது |

மேற்காணும் அட்டவணையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கவிதைகளில் இடம்பெற்றுள்ள திருக்குறள்களும் அதன் விளக்கங்களும் வழங்கப்பட்டுள்ளது. ‘இறை’ பொருண்மையிலுள்ள 8 கவிதைகளில் 6 ‘கடவுள் வாழ்த்து’ அதிகாரத் திருக்குறள்களின் கருத்துகளைக் காண முடிந்தது. மேலும், 2, 3, 7, 8ஆம் திருக்குறள்களின் கருத்துகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கவிதைகளில் இடம்பெறவில்லை.

**நிறைவுரை**

இவ்வாறாகக் கவிஞர் விண்ணமுதன் அவர்களின் ‘இறை’ சார்ந்த கவிதைகளில் திருக்குறளின் முதலாம் அதிகாரத்தின் தாக்கம் அதிகமாக உள்ளதைக் காண முடிகிறது. இவரைப் போலவே நம் நாட்டின் இளைய சமுதாயம் மரபிலக்கியத்தைப் பேணிக் காத்து, அதனை அடுத்தடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்க வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

Malaysia Saiva Samaya Peravai (2018, May 27). சிவபெருமானின் எண்குணங்கள் - வழிகாட்டி: சித்தாந்த சைவம் https://saivaperavai.org/v1/peravai-en/

Satheesh. (2018, August 29). திருக்குறள் அதிகாரம் 1 - கடவுள் வாழ்த்து. Dheivegam. https://dheivegam.com/thirukkural-kadavul-valthu-adhikaram/

சரண் சுக்லாம் ஆத்மலிங்கம் (விண்ணமுதன்), ஆ. (2021). விண்ணமுதம், Firdaus Press Sdn. Bhd, சிலாங்கூர், மலேசியா.

நல்லசாமி பிள்ளை, ஜே.எம். (1923). திருக்குறள் வீட்டின்பால், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு நிலையம், சென்னை.

தமிழண்ணல். (2009). தொல்காப்பியம், சிந்தாமணி பதிப்பகம், மதுரை.

சதாசிவம், சு. (2019). செம்புலம், சென்னை.

ஆவலன்,மு. (2019). தொல்காப்பியத் தேன் துமிகள், உமா பதிப்பகம், மலேசியா.

பன்னிரு திருமுறை பாட்டும் பொருளும். (n.d.). http://www.thevaaram.org/thirumurai_1/songview.php?thiru=8&Song_idField=81050&padhi=05&startLimit=15&limitPerPage=1&sortBy=&sortOrder=DESC